27th February 1964]

திரு. து. ப. அழகமுத்து: இந்த கேஸை நடத்திய போலீஸ்காரர் பரோலில் விடுவது குறித்து ஆட்சேபித்தார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. கோ. பூவராகன்: அது போன்ற தகவல் என்னிடம் இல்லை.

திரு. து. ப. அழகமுத்து: இம்மாதிரி பரோலில் விடுவதற்கு முன்பு கேஸ் நடத்திய போலீஸ்காரரை கலந்து ஆலோசிப்பதுண்டா?

கனம் திரு. கோ. பூவராகன்: சர்க்கார் முடிவு செய்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அரசியல் காரணத்திற்காகவோ அல்லது பாதுகாப்பு விதிகளின் கீழோ தண்டனை கொடுக்கப்பட்டவர்களுக்கு பரோலில் விடும்பொழுது அரசியல் காரியங்களில் ஈடுபடக் கூடாது என்ற நிபந்தனை விதிப்பதுபோல, இருவருக்கும் பரோலில் இருக்கும்போது கள்ள நோட்டு அடிக்கக்கூடாது என்று நிபந்தனையின் பேரில் (சிரிப்பு) அவர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறாரா?

கனம் திரு. கோ. பூவராகன்: பரோலில் விட அந்த மாதிரி நிபந்தனை இருப்பதாகத் தெரியவில்லை. ஆனாலும் அவரைக் கண்காணிப்பது போலீஸின் பொறுப்பு.

திரு. மு. கருணாநிதி: இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர் பரோலில் விடப்பட்டிருப்பது வீட்டுக் கணக்கு வழக்குகளை பார்ப்பதற்கு என்று பத்திரிகைகளில் படித்தோம். ஆனால் அமைச்சர் அவர்கள் இப்போது மனைவியின் உடல் நிலை காரணமாக என்று சொல்கிறார்கள். இதில் எது சரி என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன்: அவர்கள் பரோலில் விடப்பட்டிருப்பது குடும்ப விவகாரங்களை கவனிப்பதற்கு என்ற தகவல் தான் என்னிடம் இருக்கிறது.

Highways Research Station

* 99 *Q.*—SRI K. CHEEMAICHAMY (on behalf of Sri P. K. MOOKIAH THEVAR): Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) The name of the person who is in charge of the Directorate of the Highways Research Station, Madras; and

(*b*) the nature of work done by him?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) Sri K. Ramaswamy Reddy.

(*b*) The Director of the Highways Research Station is in charge of applied Research on Highway Engineering and Traffic Engineering. His chief function is providing expert knowledge to the field Engineers of the Department in charge of various structural construction works and road works.

[27th February 1964

திரு. அ. ராகவ ரெட்டி: சார், இந்த ஹைவேஸ் ரிசர்ச் ஸ்டேஷனில் ரிடையர் ஆன ஒருவரை இவ்வளவு நாட்களாக வைத்துக் கொண்டிருப்பதற்கு பிரத்யேக காரணம் என்ன? மறுபடியும் உத்தியோகம் கொடுத்து, இதர சலுகைகளும் கொடுப்பதற்கு பிரத்யேக காரணம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா: அவர்கள் தொடர்ந்து இந்த ஆராய்ச்சி நிலயத்தில் இருப்பதற்குக் காரணம், அவர்கள் ஈடுபட்டிருந்த ஆராய்ச்சிகள் சம்பந்தப்பட்ட வேலை இன்னும் முடிவடையவில்லை. அந்த வேலை தொடர்ந்து செய்யப்படுவதால் இந்த மாநிலத்தின் நன்மைக்கு அவசியமாக இருக்கிறது என்பது தான்.

*100 *Q.*—Sri K. CHEEMAICHAMY (on behalf of Sri P. K. MOOKIAH THEVAR): Will the Hon. the Minister for Works be pleased to state what is the channel of purchase of the articles required in the Highways Research Station and its allied offices?

THE HON. SRI V. RAMAIAH: The equipment required are purchased by inviting open tenders on all-India basis by advertising in leading dailies. In the case of special equipment, which are to be imported from abroad, indents are placed through the Director-General of Supplies and Disposals, the India Stores Department, London, and the India Supply Mission, Washington, as the case may be. Chemicals, glassware, etc., are procured through Medical Stores Depot. If not available in the depot, they are procured from the open market, inviting sealed quotations prescribing a time limit. Cement is procured directly from factories, gravel, sand and metal from the piece-work contractors.

டாகுமெண்டரி பிலிம்கள்

*101 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-62 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசாங்கம் தயாரித்து வெளியிட்டுள்ள டாகுமெண்டரி பிலிம்கள் எத்தனை?

(இ) இதற்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

(உ)) மேலும் எவ்வளவு பொருட்செலவில் எத்தனை படங்கள் எடுக்க உத்தேசம்?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) (1) கிராம நலம்,

(2) கல்விச் செல்வம்,

(3) மங்காத ஒளி,

(4) தமிழ்நாடு தழைக்கிறது.